செ.வெ.எண்.27 நாள்: 17.05.2019

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற இடைத்தேர்தல் வாக்குசாவடி பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்களுக்கான கூட்டம் மற்றும் மண்டல அளவிலான வாக்குச்சாவடி பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தும் பணிகளை ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பொது பார்வையாளர் திரு.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

---

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் ஓட்டப்பிடாரம் சட்டமன்ற இடைத்தேர்தல் வாக்குசாவடி காவல் பணி அலுவலர்கள் கூட்டம் இன்று (17.05.2019) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

ஓட்டப்பிடாரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 19.05.2019 அன்று நடைபெறவுள்ளது. வாக்குச்சாவடி பாதுகாப்பு பணிக்கு செல்லும் நீங்கள் அனைவரும் வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தூரத்திற்கும் எவைகளை அனுமதிக்க வேண்டும், 100 மீட்டர் தூரத்தில் எவைகளை அனுமதிக்க வேண்டும் என்பதை முழுமையாக தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். வாக்குச்சாவடி 100 மீட்டருக்குள் தனியார் சுவர்களிலும், அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் இருக்கக் கூடாது, வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (BLO) வாக்குச்சாவடியின் அருகில் அவர்கள் இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளி வாக்காளர்களை வாக்குச்சாவடி வளாகம் வரை வாகனத்தில் வர அனுமதிக்க வேண்டும். வாக்குச்சாவடிகளில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி வரிசைகளுடன் மாற்றுத்திறனாளிகளுக்கு, முதியவர்களுக்கும் தனி வரிசை ஏற்படுத்தி அவர்கள் விரைந்து வாக்களித்து செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். வாக்காளர்களிடமும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களிடம் கனிவுடன் நடந்துகொள்ள வேண்டும். பாதுகாப்பு பணியில் நீங்கள் வாக்குச்சாவடிக்குள் செல்ல அனுமதி இல்லை, வாக்குச்சாவடி தலைமை அலுவலர் அழைத்தால் மட்டுமே வாக்குச்சாவடிக்குள் செல்ல வேண்டும். வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு காத்திருப்போர் அறைகள் உள்ளது. அவர்களை காத்திருக்கும் அறைகளில் இருந்து வாக்குச்சாவடிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒவ்வொரு வாக்குப்பதிவு மையங்களிலும் முதலுதவி சிகிச்சைகளுக்காக மருத்துவ பணியாளர் ஒருவர் இருப்பார். அவர் வளாகத்தில் இருக்க அனுமதிக்க வேண்டும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவிடும் வகையில் வீல் சேர்களும், உதவியாளர்களும் நியமிக்கப்படவுள்ளார். அவர்களும் வளாகத்தில் இருக்க அனுமதிக்க வேண்டும். வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்தில் வாக்குச்சாவடி தலைமை அலுவலர் வரிசையில் கடைசியில் உள்ளவர்களுக்கு முதல் டோக்கன் என வரிசையாக வழங்குவார். அதன்பிறகு வருபவர்களை வரிசையில் அனுமதிக்க கூடாது. இடைத்தேர்தலில் மத்திய காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ளனர். அவர்களுடன் இணைந்து சிறப்பாக பணியாற்றிட வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து வாக்குச்சாவடிக்கு பொருட்களை எடுத்துச் செல்லும் மண்டல அளவிலான வாகனங்களுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தும் பணிகளை பொது பார்வையாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.முரளி ரம்பா, இ.கா.ப., மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்கள், உதவி காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.